ஆலோசிக்கப்பட்டது. திருப்பாதிரிப்புலியூர்

குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினார்.

மாறன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# ஸ்ரீசாய் சமிதியில் கோடை முகாம்



நெய்வேலி ஸ்ரீசாய் சமிதியில் கோடை கால பயிற்சி முகாமில் பங்கேற்ற மாணவ,மாணவிகளுக்கு என்.எல்.சி., இந்தியா நிறுவனத்தின் சேர்மன் பிரசன்னகுமார் மோட்டுப்பள்ளி சான்றிதழ்கள் வழங்கி கவுரவித்தார்.

**நெய்வேலி, மே 7–**

நெய்வேலி ஸ்ரீசாய் சமிதியில் கோடை முகாமில் என்.எல்.சி., சேர்மன் கலந்து கொண்டு பரிசு வழங்கினார்.

நெய்வேலி டவுன்ஷிப் வட்டம் 8 ல் உள்ள ஸ்ரீசாய் சமிதி வளாகத்தில் கடந்த 4ம் தேதி முதல் நேற்று வரை இலவச கோடை கால பயிற்சி முகாம் நடந்தது. 4 வயது முதல் 14 வயது வரை உள்ள மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

நெய்வேலி டவுன்ஷிப், இந்திரா நகர் மாற்று குடியிருப்பு, வெங்கடாம்பேட்டை, குறிஞ்சிப்பாடி மற்றும் திடீர்குப்பம் ஆகிய பகுதிகளிலிருந்து 500க்கும் மேற்பட்ட மாணவ,மாணவிகள் பங்கு பெற்றனர்.

முகாமில் பங்கேற்றவர்களுக்கு கம்யூனிகேஷன் மற்றும் ஸ்லோகம், பஜன் வேதம் உட்பட அறிவு மற்றும் திறமைகளை வளர்ப்பது குறித்த பயிற்சி வழங்கப்பட்டது.

முகாமில் பங்கேற்றவர்களுக்கு நேற்று சான்றிதழ்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது. என்.எல்.சி., பள்ளி கல்வித்துறை செயலாளர்நாகராஜன்தலைமை தாங்கினார். நெய்வேலி ஸ்ரீசாய் சமிதி பொறுப்பாளர் டாக்டர் பலராம் சுப்பிரமணியம் மற்றும் என்.எல்.சி.,முதன்மை பொது மேலாளர் ராஜீவன் முன்னிலை வகித்தனர். கடலூர் மாவட்ட தலைவர் சாய் பிரசாத் வரவேற்றார்.

என்.எல்.சி., இந்தியா நிறுவனத்தின் சேர்மன் பிரசன்னகுமார் மோட்டுப்பள்ளி பயிற்சியில் பங்கேற்ற மாணவ,மாணவிககளுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கி கவுரவித்தார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை நெய்வேலி சாய் சமிதியைச் சார்ந்த முன்னாள் பாலவிகாஸ் மாணவிகள் செய்திருந்தனர்.

## மங்கலம்பேட்டை

## 7 மையங்களில் 'நீட்' தேர்வு